நேரத்தில் வர முடியாது இருக்கிறது. ஆகவே இனிமேலாகிலும் திருப்புவனம் ஒன்றியத்தில் வேலைசெய்யும் அலுவலர்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அலுவலர்கள் சரியான நேரத்தில் அலுவலகத்திற்கு வரவில்லையென்றால் மிசா சட்டம் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் வீடு கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

அறநிலைய நிதி.

***242 வினா—திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அறநிலைய நிதியின் கீழ் எவ்வளவு தொகை சேர்ந்துள்ளது?

(இ) இந்த நிதி எந்த முறையில் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 1973-74-ம் ஆண்டில் அறநிலைய நிதியின் கீழ் ரூ. 76,91,456.63 சேர்ந்துள்ளது. 1974-75-ம் ஆண்டின் நிதிக் கணக்குகள் சென்னை கணக்காய்வுத் தலைவரால் இன்னும் முடிவாக்கப்பட வில்லை.

(இ) இந்து சமய அறநிலைய நிதி அத்துறையைச் சார்ந்த அலுவலர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளுக்காகவும், செயல் அலுவலர்கள், தணிக்கைத் துறை அலுவலர்கள் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்காகவும் செலவு செய்யப்படுகின்றன.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: எண்டோமெண்டு கமிஷனரிடம் ஒரு தனி நிதி இருக்கிறது. ஒவ்வொரு கோவிலும் அதற்கு என்று ஒரு தொகையை அனுப்பி வைக்க கோரப்பட்டிருக்கிறது. அந்த நிதியை அவர் இன்ன இன்னமுறையில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு வரைமுறைகள் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இது அறநிலைய நிர்வாக நிதியைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் ஆணையர் வைத்திருக்கிற பொதுநல நிதியைப்பற்றிக்

கேட்கிருர் என்று கருதுகிறேன். அவர் அந்த நிதியை இன்ன இன்ன வகைகளில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன.

கடலங்குடிப் பகுதியில் திருமண மண்டபம்.

*243 **விஞ—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் கடலங்குடி பஞ்சாயத்துப் பகுதியில் அறநிலையத் துறையால் திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆலயத்தின் நிதி நிலைமையைக் கருதியும், தற்போதுள்ள பொருள்களின் விலையேற்றத்தை மனதில் கொண்டும் ஆலய அறங்காவலர்களின் விருப்பப்படி ரூ. 30,000-க்கு திருமண மண்டபம் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீடு ஒன்று தயாரிக்க கோரப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து வேலையைத் தொடங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபத்தை விரைவில் கட்ட, அந்தத் திருக்கோவில் அறங்காவலர்கள் கோரியிருக்கிற அனுமதியை அரசு விரைவில் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: என்ன அனுமதி கோரி யிருக்கிருர்கள் என்று தெரியவில்லை.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்படுகிற திருமண மண்டபத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இது கோவில் நிதியில் இருந்து கட்டப்படுகிற திருமண மண்டபம்.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக திருமண மண்டபங்கள் கட்டப்படுவதற்கு எந்த அடிப்படையில் அறநிலையம் உதவி செய்கிறது? கோவில்கள் எவ்வளவு பணம் தரவேண்டும்? பொது